பிரசுரித்தது தவறு இல்லை என்றும், அது நியாயமானது என்றும் பத்திரிகை ஆசிரியர் கூறியுள்ளார். இப்பேரவைச் செயலகத்தில் பணிபுரிவரின் பணி விதிகள் முதலியன அரசிய லமைப்புச் சட்டம் 187-(3) பிரிவின் கீழ் ஆளுநரால் பேரவைத் தலைவரைக் கலந்து இயற்றப்பட்டது ஒன்றாகும். மேலும் இத்துறைக்கான நிதி ஒதுக்கீடு அரசு செயலக மானியம் கீழ் சேர்க்காது, மானியக் கோரிக்கை எண்.7-ன் கீழ் தனியே வருவதையும் இச்செயலகம் பேரவைத் தலைவரின் பொறுப்பில் நடப்பதால் செயலகம் சுதந்திரமாக இயங்கவில்லையெனில் அது பேரவைத் தலைவரையே சாறுவதால், பேரவைத் தலைவரையே களங்கப்படுத்துவதாக அமையும் என்பதையும் நினைவுபடுத்து கிறேன்.

உறுப்பினர் அவர்கள் விளக்கத்தையும், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் விளக்கத்தையும் கேட்ட பிறகு, மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது இப்பிரச்சினையில் அவை உரிமை மீறல் குற்றம் இருப்பதாகத் தெரிகிறது என்று தீர்ப்பளிக் கிறேன்.

3. அரசினர் தீர்மானம்.

இந்துப் பத்திரிகை மீதும், திரு. ஆர். கே. பாலசுப்பிர மணியன் மீதும் உரிமை பிரச்சினை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பெறுதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு எழுப்பப்பட்டுள்ள பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில் அவை உரிமை மீறல் இருக்கிறது என்று தாங்கள் தீர்ப்பு அளித்துள்ள தால், பேரவையின் 251-வது விதியின் கீழ், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

'' திரு. ஆர். கே. பாலசுப்பிரமணியன் அவர்கள் 'இந்து' பத்திரிகையில் கடிதம் எழுதியதின் மூலமும், 'இந்து' பத்திரிகை அக்கடிதத்தைப் பிரசுரித்ததன் மூலமும் இப் பேரவையின் உரிமையை மீறிய செயலில் ஈடுபட்டிருப்பதால், அப்பிரச்சினை குறித்து மேலும் ஆய்ந்து அவைக்கு அறிக்கை அளிக்க வேண்டுமென்பதற்காக, இப்பிரச்சினையை, அமைக்கப் பட இருக்கும் அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டும் '' என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.